# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

**OS. No**. 137/2015 **Date**: 22.07.2025

**DW**2 - ஆணைக்கவுண்டர்

சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-

என்னுடன் பிறந்தவர்கள் என்னையும் சேர்த்து ஐந்து பேர். எங்களுக்குள் பாகப்பிரிவினை ஆகிவிட்டது. தாவா சொத்திலிருந்து வேலி முள்ளை நான் 6 மாதத்திற்கு முன்பு வெட்டி விற்பனை செய்தேன் என்றால், சரிதான். சாட்சி தற்போது தன் மாமன் தங்கராஜ் என்பவர்தான் விற்பனை செய்துள்ளதாக சொல்கிறார். முள் வெட்டும்பொழுது தான் உடனிருந்ததாக சொல்கிறார். தாவா சொத்தில் பழனியப்பன் சுவாதீனத்தில் இல்லையென்றால், சரிதான். எனக்கும் தங்கராஜீக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்தது வருகிறது என்றால், சரியல்ல. தாவா சொத்து வாய்மொழியாக பாகம் ஏற்பட்டதாக சொல்வதுபற்றி எனக்கு நேரில் தெரியாது என்றால், சரிதான். நான் சொல்வதுபோல் தங்கராஜீம், பழனியப்பனும் தாவா சொத்தை பாகம் பிரித்து அனுபவிக்கவில்லை என்றால்,சரியல்ல. தாவா சொத்தில் வாதிகளுக்கு 1/6 பாகம் உள்ளது என்றால், எனக்கு தெரியாது. தாவா சொத்தில் வாதிகளுக்கு பாகம் இல்லை என்று நான் சொல்வது பொய் என்றால், சரியல்ல.

ஒப்பம்/-ஆணைக்கவுண்டர்

ஒப்பம்/-திரு.ந.பன்னிர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.